


**12. 05. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவைத் தலைவராக திரு. J.C.D. பிரபாகரும், துணைத் தலைவராக திரு. ரவிசங்கரும் இன்று பொறுப்பேற்றனர்.

பேரவையின் மாண்பையும், கண்ணியத்தையும் காக்கும் பொறுப்பு பேரவை தலைவருக்கு உள்ளதாக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் கூறியுள்ளார்.

2. செவிலியர்களும் சுகாதார பணியாளர்களும், தேசநலனிற்காக அளப்பரிய சேவையாற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.

3. இளநிலை மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான நீட் நுழைவு தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது.

4. நாட்டில் சமையல் எரிவாயு உற்பத்தி 54 ஆயிரம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

5. ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் அஹமதாபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சன் ரைஸர்ஸ் ஹைதராபாத் – குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவைத் தலைவராக திரு. J.C.D. பிரபாகர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

துணைத் தலைவர் திரு. ரவிசங்கரும் போட்டியின்றி தேர்வானார்.

தமிழக சட்டப் பேரவை இன்று கூடியதும் தற்காலிக சபாநாயகர் திரு. கருப்பையா, பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. J.C.D. பிரபாகரும்,

துணைத் தலைவர் பதவிக்கு திரு. ரவிசங்கரும் மனு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

இவர்கள் இருவரை தவிர வேறு யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யாததால் போட்டியின்றி ஒருமனதாக இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அவை முன்னவர் திரு. செங்கோட்டையனும்,

எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலினும், பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. J.C.D. பிரபாகரை கைப்பிடித்து அழைத்து சென்று இருக்கையில் அமர வைத்தனர்.

பின்னர் அவை நடவடிக்கைகளை தொடங்கிய திரு. J.C.D. பிரபாகர்,

பேரவை தலைவரையும், துணைத் தலைவரையும், முதலமைச்சர், எதிர்கட்சித்தலைவர் உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற கட்சித்தலைவர்களும் வாழ்த்தி பேசுவார்கள் என்று அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பேசிய முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய், பேரவையின் மாண்பையும், கண்ணியத்தையும் காக்கும் பொறுப்பு சட்டப்பேரவை தலைவருடையது என்று குறிப்பிட்டார்.

சட்டப் பேரவை நடவடிக்கைகள் சீராக, செம்மையாக நடைபெற வேண்டுமென்று வலியுறுத்திய அவர், ஒரு கட்சியில் ஒரு உறுப்பினர் இருந்தாலும் அவரது கருத்துக்கு மதிப்பளிக்கப்படும் என்றார்.

பின்னர் வாழ்த்தி பேசிய எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், பேரவைத் தலைவர் நடுநிலையுடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தி.மு.க. ஆக்கப்பூர்வமான எதிர்கட்சியாக செயல்படும் என்றும், பேரவையில் ஆரோக்கியமான விவாதங்களுக்கு இடமளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அஇஅதிமுக சார்பில் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, திரு. எஸ். பி. வேலுமணி ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

காங்கிரஸ்,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்

இந்திய கம்யூனிஸ்ட்

இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

ம.தி.மு.க.

கொங்கு மக்கள் தேசிய கட்சி

மனித நேய ஜனநாயக கட்சி

மனித நேய மக்கள் கட்சி

பா.ம.க., தே.மு.தி.க.,

பி.ஜே.பி சார்பில் அக்கட்சியின் சட்டமன்ற தலைவர்கள் வாழ்த்தி பேசினர்.

இதனைத் தொடர்ந்து பேசிய அவைத் தலைவர் திரு. J.C.D. பிரபாகர், சட்டப் பேரவையில் ஆளும் கட்சிக்கும், எதிர் கட்சிக்கும் சமவாய்ப்பும், உரிமையும் வழங்கப்படும் என்று உறுதி அளித்தார்.

அவையின் மாண்பை பாதுகாத்து, தரமான விவாதங்களுக்கு இடமளிப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

வாழ்த்துரை வழங்கிய அனைவருக்கும் அவர் நன்றி தொிவித்துக் கொண்டார்.

துணைத் தலைவர் திரு. ரவிசங்கரும் வாழ்த்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

தமிழக சட்டப் பேரவையில் த.வெ.க. அரசின் மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் நாளை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மதுபான கடைகள்

தமிழ்நாட்டில் பொதுமக்கள் நலன் கருதி வழிபாட்டுத்தலங்கள், கல்வி நிலையங்கள், பேருந்து நிலையங்கள் அருகே 500 மீட்டர் வரை அமைந்துள்ள 717 மதுபான சில்லரை விற்பனை கடைகளை இரண்டு வாரங்களுக்குள் மூடுமாறு முதலமைச்சர் திரு. விஜய் ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் செயல்படும் 4 ஆயிரத்து 765 மதுபான கடைகளில் இவற்றை கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஹிமந்தா பிஷ்வா ஷர்மா

அசாம் மாநில முதலமைச்சராக பி.ஜே.பி. மூத்த தலைவர் திரு. ஹிமந்தா பிஷ்வா ஷர்மா, தொடர்ந்து 2-வது முறையாக இன்று பதவியேற்றார்.

குவஹாட்டியில் நடைபெற்ற விழாவில், அம்மாநில ஆளுநர் திரு. லக்ஷ்மண் பிரசாத் ஆச்சார்யா அவருக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

சட்டப்பேரவை தேர்தலில் மொத்தமுள்ள 126 இடங்களில், 102 இடங்களில் வெற்றி பெற்று தொடர்ந்து 3-வது முறையாக தேசிய ஜனநாயக கூட்டணி அசாமில் ஆட்சியமைத்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

செவிலியர் தினம்

செவிலியர்களும் சுகாதார பணியாளர்களும், தேச நலனிற்காக அளப்பரிய சேவையாற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.

சர்வதேச செவிலியர் தினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி தேசிய ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை சிறப்பாக செயலாற்றிய செவிலியர்களுக்கு இன்று வழங்கி பேசிய அவர், சவாலான தருணங்களில் தன்னலம் கருதாது தரமான மருத்துவ சேவையை வழங்குவதில் செவிலியாகள் இன்றியமையா பணியாற்றுவதாக குறிப்பிட்டார்.

நோயாளிகளை கருத்துடனும், அயர்வின்றியும், அர்ப்பணிப்புடன் கவனித்து உத்வேகத்துடன் செயலாற்றும் அனைத்து செவிலியர்களையும், குடியரசு தலைவர் பாராட்டினார்.

குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கீழ் பணியாற்றும் செவிலியர்களுக்கும், தன்னார்வ அமைப்பிரை சேர்ந்தவர்கள் உள்ளிட்டோருக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

செவிலியர்களுக்கு ஒருலட்சம் ரூபாய் பரிசுத் தொகையோடு, பாராட்டு சான்றிதழும், விருதுகளும் வழங்கப்பட்டு கௌவரவிக்கப்பட்டனர்.

மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா,

இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில், திருச்சி, நெல்லை, தூத்துக்குடி, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் செவிலியர் தினம் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் செவிலியர்கள் மருத்துவர்கள் இணைந்து மெழுகுவர்த்தி ஏந்தி இவ்விழாவை உற்சாகத்துடன் கொண்டாடினர்.

நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற பேரணியில் 500-க்கும் மேற்பட்ட செவிலியர்கள் பங்கேற்று மெழுகுவர்த்தி ஏந்தி ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தியதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

திருப்பூரில் செவிலியர்களின் சேவையை போற்றும் வகையில் உறுதிமொழி ஏற்கப்பட்டு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

500-க்கும் மேற்பட்ட செவிலியர் பயிற்சி பள்ளி மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

தூத்துக்குடி அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விஷ்ணு மஹாஜன், 90 சதவிகித நோயாளிகளை செவிலியர்கள் தான் கவனிப்பதாக எடுத்துரைத்தார்.

செவிலியர்களின் குறைகளை களைய மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நீட்

தேசிய தேர்வு முகமை சார்பில் கடந்த 3-ம் தேதி நடத்தப்பட்ட இளநிலை மருத்துவ சேர்க்கைக்கான நீட் நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது.

வினாத்தாள் கசிந்ததாக கூறப்படும் புகார்களை தொடர்ந்து மாணாக்கரின் நலன் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

இவ்விவகாரம் குறித்து மத்திய புலனாய்வு முகமையின் விரிவான விசாரணைக்கு பரிந்துரைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக கூறியுள்ள இம்முகமை, இந்த விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

நீட் மறு தேர்விற்கான தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறியுள்ள தேசிய தேர்வு முகமை, இதற்கான பதிவு, தேர்வு தொடர்பான தகவல்கள், தேர்வு மையங்கள் போன்றவற்றில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் தொிவித்துள்ளது.

மறு தேர்விற்காக யாரும் மீண்டும் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியுள்ள தேசிய தேர்வு முகமை, கூடுதல் தேர்வு கட்டணமும் பெறப்படாது என்று அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஹர்தீப் சிங் பூரி

உள்நாட்டில் சமையல் எரிவாயு உற்பத்தி 36 ஆயிரம் மெட்ரிக் டன்னிலிருந்து, 54 ஆயிரம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது என்று மத்திய பெட்ரோலியம் எரிவாயுத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி தொ◌ிவித்துள்ளார்.

புதுதில்லியில் வருடாந்திர உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், மேற்காசிய நெருக்கடியின் மத்தியில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியை சாராமல் இந்நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டு உள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மதுரை

மதுரை மாவட்டத்தில் தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி வாகனங்களின் ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் குமார் இன்று தொடங்கிவைத்தார்.

பராமரிப்பு மற்றும் ஆய்விற்கு 16 அம்ச நடைமுறைகள் பின்பற்றப்படுவதாக அவர் தொ◌ிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை

நாகை நெல்கடை மாரியம்மன் கோவில் செடில் உற்சவம் வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தொ◌ிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

தென்மேற்கு பருவமழை தெற்கு வங்கக்கடல், அந்தமான் கடல் பகுதிகள், நிக்கோபார் தீவு பகுதிகளில் இந்த வார இறுதியில் தொடங்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தொ◌ிவித்துள்ளது.

இதனிடையே தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெறக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் தொ◌ிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் அஹமதாபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சன் ரைஸர்ஸ் ஹைதராபாத் – குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖